# மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
# நாமக்கல் – 637 001.

## ஒற்றைக்கண் தொலைநோக்கி – தயாரிப்புப் பணிமனை

******

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இராசிபுரம் இன்னர்வீல் சங்கமும் இணைந்து 40 ஆசிரியர்களுக்கு 'ஒற்றைக்கண்' தொலைநோக்கியை உருவாக்கும் பயிற்சியை 01.3.2025 அன்று இராசிபுரம் ரோட்டரி ஹாலில் வழங்கின.

தேசிய அறிவியல் தினத்தைக் கொண்டாடும் நோக்கில் ஒற்றைக்கண் தொலைநோக்கித் தயாரிப்புச் செயல்முறைப் பயிற்சி வழங்கப்படுவதாக இராசிபுரம் இன்னர்வீல் தலைவர் சுதா அவர்கள் முன்னிலை வகிக்கும்போது கூறினார்.

பல துறைகளுக்கானக் கருவிகள் தயாரிப்பு, கருவிகளின் எண்ணிக்கை, பயன்பாடு போன்றவற்றில் ஒரு நாட்டின் வளர்ச்சி அடங்கியுள்ளது. கருவிகள் தயாரிக்க அடிப்படை அறிவியல் விதிகளைத் தெரிந்திருக்க வேண்டும். முதல்நிலை கருவிகளை உருவாக்கும்போது அறிவியலின் அடிப்படை விதிகளைப் புரிந்து கொள்ள முடியும். முதல்நிலைக் கருவிகள் காலப்போக்கில் பயன்படுத்துவதற்கு வசதியாக மேம்படுத்தப்படுகின்றன.

ஒற்றைக்கண் தொலைநோக்கியை ஆசிரியர்கள் உருவாக்கும்போது அடிப்படை அறிவியல் விதிகளைப் புரிந்துகொண்டனர் என்றும், அறிவியல் விதிகள் எப்படி ஒரு கருவித்தயாரிப்பில் உதவுகிறது என்பதை தெரிந்து கொண்டபோது ஆசிரியர்கள் ஆர்வத்துடன் கருவித் தயாரிப்பில் ஈடுபட்டனர் என்றும் நிறுவன முதல்வர் செல்வம் தனது தலைமையுரையில் கூறினார்.

பிவிசி பைப், இரு குவியதூரங்கள் கொண்ட லென்சுகள், ஷார்ப்பனர், சிறிய ஸ்கேல், எமர்ஷீட், லிண்ட் துணி, இரப்பர் பேண்ட், வொயரிங் டேப், கத்தி, கத்திரிக்கோல், எழுதுபலகை, பெவிக்கால் போன்றவற்றைப் பயன்படுத்தி ஒற்றைக்கண் தொலைநோக்கியை ஆசிரியர்கள் தயாரிக்கப் பயிற்சி கொடுக்கப்பட்டது என்றும், பயிற்சிப் பெற்ற ஆசிரியர்கள், இரு குவியதூரமுள்ள லென்சுகள் மற்றும் பிளாக் சார்ட்டின் மூலம் பள்ளியில் இக்கருவியைத் தயாரிக்க மாணவர்களுக்குப் பயிற்சிக் கொடுப்பார்கள் என சேலம், பாகல்பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் (பயிற்சியாளர்) அருளானந்தம் கூறினார்.

இப்பயிற்சிக்கு இந்நிறுவன விரிவுரையாளர் தேவராசு ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டு வரவேற்புரையையும், இராசிபுரம் இன்னர்வீல் செயலாளர் சிவலீலாஜோதி வாழ்த்துரையையும், இந்நிறுவன விரிவுரையாளர் சிவபெருமான் நன்றியுரையையும் கூறினார்கள்.